# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 208 | 4 Pages | 29.2.2024 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 208 | 4 பக்கங்கள் | 29.2.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |

# முு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முழுவதும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டங்கள்




சென்னை, பிப்.29

தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது:

"வருகிற 1ந் தேதி நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் கழகத்தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 71ம் அகவையில் அடியெடுத்து வைக்கிறார்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம் தலைவர், கழகத்தை 6வது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர வைத்த பெருமையைப் பெற்றுத் தந்துள்ளார்.

தந்தை பெரியாரின் சமூகநீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கையையும், தமிழினத் தலைவர் கலைஞரின் சமூகநலத் திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

அத்தகைய பெருமைமிகு தலைவரின் பிறந்தநாளை நாம் அனைவரும் சீரிய வகையில் கொண்டாடும் விதமாக திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் பொதுக் கூட்டங்களை தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சி, நகராட்சிகளில் தலைமைக் கழக அறிவிப்பின்படி நடத்திடுவது" என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, வருகிற மார்ச் 2, 3 மற்றும் 4ந்தேதிகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாநகரம் மற்றும் நகரங்களில் அறிவிக்கப்பட்டுள்ள பேச்சாளர்களைக் கொண்டு, "எல்லோருக்கும் எல்லாம்" "திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் முதலமைச்சர்மு.க.ஸ்டாலினின்பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டங்கள்" நடத்திட வேண்டும்.

2ந்தேதி: ஈரோடுகனிமொழி எம்.பி., திருவெறும்பூர்அமைச்சர் ஐ.பெரியசாமி, நாமக்கல்திருச்சி சிவா, திண்டுக்கல்பொன்முடி, நாகை அமைச்சர் எ.வ.வேலு, நாகர்கோவில்அமைச்சர் தங்கம் தென்னரசு, வேலூர்அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மதுரைதயாநிதி மாறன், கோபிசெட்டி பாளையம் ஆ.ராசா, கிருஷ்ணகிரிகாசி முத்து மாணிக்கம் மற்றும் முக்கிய நகரங்களில் பேசுபவர்கள் விவரம்.

3ந்தேதி: திருமங்கலம்அமைச்சர் கே.என்.நேரு, கோவை ஆ.ராசா, கடலூர்அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, விருதாச்சலம்அமைச்சர் எ.வ.வேலு, காஞ்சிபுரம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பேசும் இடங்கள்.

4ந்தேதி: துரைமுருகன் செங்கல்பட்டுகழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. மற்றும் பல்வேறு ஊர்களில் பேசுபவர்கள் பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## போரில், ரஷ்யா தோற்றே ஆக வேண்டும்: மேக்ரான் திட்டவட்டம்




ரஷ்யா, பிப்.29

கடந்த 2022 பிப்ரவரி 24 அன்று தொடங்கிய ரஷியஉக்ரைன் போர், 2 வருடங்களைக் கடந்து தீவிரமடைந்துள்ள நிலையில், உக்ரைனுக்கு உதவி வந்த அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் நிதியுதவி உக்ரைனுக்கு தொடர்ந்து கிடைப்பதில் பல்வேறு காரணங்களால் சிக்கல் நிலவுகிறது.

உக்ரைனிடம் போதுமான அளவு ராணுவ தளவாடங்கள் இல்லாததால், தங்கள் நாட்டில் ரஷிய ராணுவம் முன்னேறி , பிராந்தியங்களை கைப்பற்றுவதை தடுப்பது கடினமாக உள்ளது என உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்து உலக நாடுகளிடம் உதவி கேட்டு வருகிறார்.

மேற்கத்திய நாடுகளின் ராணுவ உதவிகள் கிடைப்பது தாமதமாவதால், உயிரிழப்புடன் உக்ரைனின் பல பிராந்தியங்களை ரஷியாவிடம் இழக்க நேரிடும் என உக்ரைன் ராணுவ அமைச்சர் கடந்த வாரம் தெரிவித்தார்.

இந்நிலையில், உக்ரைனுக்கு ஆதரவான நாடுகளின் சந்திப்பு, பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெற்றது.

இதில் பேசிய பிரான்ஸ் அதிபர் எம்மானுவல் மேக்ரான் தெரிவித்ததாவது:

இப்போரில் ரஷியா வெற்றி பெறக் கூடாது. ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்புடன் நிலையாக இருக்க ரஷியா இப்போரில் தோற்க வேண்டியது அவசியம்.

ரஷியா வெற்றி பெறாமலிருக்க நாங்கள் அனைத்தையும் செய்வோம்.

ரஷியாவின் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடன்தான் நாங்கள் போரிடுகிறோமே தவிர ரஷிய மக்களுடன் அல்ல.

குறுகிய தூர மற்றும் தொலைதூர ஏவுகணைகளும், வெடிகுண்டுகளும் உக்ரைனுக்கு விரைவில் வழங்கப்படும்.

உக்ரைனுக்கு நட்பு நாடுகளின் ராணுவத்தை அனுப்ப வேண்டிய சூழல் வந்தால் அதையும் பரிசீலனை செய்வோம்.

இவ்வாறு மேக்ரான் கூறினார்.

சில தினங்களுக்கு முன், ரஷிய அதிபர் விளாடிமிர் புதின், "நேரடியாக மேற்கத்திய நாடுகளின் ராணுவம் உக்ரைன் மண்ணில் இருந்து போரிட தொடங்கினால் அது ரஷியாவிற்கும் நேட்டோ (NATO) கூட்டணி நாடுகளுக்கும் எதிரான போராக மாறும் "என எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

..............................................

## மீன் தொட்டியில் "மர்ம" ஒலி ஆய்வில் வெளிவந்த அதிசய உண்மை



ஜெர்மனி, பிப்.29

ஜெர்மனியின் தலைநகர் பெர்லின் (Berlin) நகரில் ஒரு ஆராய்ச்சி கூடத்தில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் வினோத ஒலி கேட்டது.

இதற்கான காரணத்தை கண்டுபிடிக்கவிஞ்ஞானிகள் தீவிரமாக முனைந்தனர்.

இதில், டேனியோனெல்லா செரிப்ரம் (Danionella cerebrum) எனும் மிகச் சிறிய வகை மீன் ஒன்று அதன் அங்கங்களில் ஒன்றான "ஸ்விம் ப்ளாடர்" (swim bladder) எனும் உறுப்பில் இருந்து சக்திமிக்க சீரான ஒலியை உண்டாக்குவது தெரிய வந்தது. இந்த மீன் வெளிப்படுத்தும் ஒலியின் அளவு மீன் தொட்டியின்நீர்நிலைகளில் 140 டெசிபெல் (decibel) எனபதிவாகியுள்ளது.

இதுஒருதுப்பாக்கிசூட்டின்ஒலிக்குநிகரானதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

12 மில்லிமீட்டர் நீளம் மட்டுமே உள்ள இந்த டெனியோனெல்லா மீன் எழுப்பும் ஒலிதான் உலகின் அனைத்து வகை மீன் இனத்திலும் எழுப்பப்படும் அதிகமான ஒலியாகும். "டிரம்மிங்" (drumming) எனப்படும் இத்தகைய ஒலியானது ஒரு வகையான செய்தி பரிமாற்றம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். டெனியோனெல்லா மீன்களின் உடல் கண்ணாடி போன்று ஒளிஊடுருவும்தன்மை (transparent) கொண்டதால் அவை உயிருடன் இயங்கும் போதே ஆராய்ச்சி செய்வது எளிதாக இருந்தது.

இந்த ஆராய்ச்சியின் போதுதான் டெனியோனெல்லா இருந்த மீன் தொட்டியை கடந்து சென்றவர்கள் அது எழுப்பும் ஒலியை கேட்க முடிந்தது. மிகச் சிறிய வகை மீன் மிக அதிக ஒலியை எழுப்பும் வினோதம், ஆராய்ச்சியாளர்களை மட்டுமின்றி கடல்வாழ் உயிரின ஆர்வலர்களுக்கும் சுவாரஸ்யமான செய்தியாக உள்ளது. இது குறித்து மேலும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

..............................................

## அமெரிக்காவில் இஸ்ரேல் தூதரகம் முன்பு தீக்குளித்த விமானப்படை வீரர் பலி




அமெரிக்கா, பிப்.29

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் உள்ள இஸ்ரேல் தூதரகம் முன்பு அமெரிக்க விமானப்படை வீரர் அரோன் புஷ்னெல் (வயது 25) காசா மீதான போருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டார். பாலஸ்தீனத்தை விடுதலை செய்ய வேண்டும், இனப்படுகொலைக்கு துணைபோகமாட்டேன் என்று கோஷம் எழுப்பியபடி அவர் திடீரென்று தீக்குளித்தார். அதை சமூகவலைதளத்தில் அரோன் நேரடியாகவும் ஒளிபரப்பு செய்தார். படுகாயமடைந்த அரோன் புஷ்னெல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், சிகிச்சை பலனின்றி விமானப்படை வீரர் அரோன் புஷ்னெல் உயிரிழந்தார்.

## தேர்தல் வந்தால் தான் எளிய மனிதர்களின் கோரிக்கை மத்திய அரசின் நினைவுக்கு வருகிறது

சென்னை, பிப்.29

மதுரை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ரெயில்வே துறையில் கோவிட் காலத்தில் ஏற்றப்பட்ட கட்டண உயர்வை கைவிடக்கோரிய போராட்டத்திற்கு வெற்றி. வெளிப்படையாக அறிவித்தால் எதிர்கட்சி கோரிக்கைகள் ஏற்கப்பட்டதாக கருதப்படும் என்பதால் சாதாரணக் கட்டணத்தை வசூலிக்க சத்தமில்லாமல் சுற்றறிக்கை. தேர்தல் வந்தால் தான் எளிய மனிதர்களின் கோரிக்கை மத்திய அரசின் நினைவுக்கு வருகிறது என கூறியுள்ளார்.

## தமிழ்த்தாய் அவமதிப்பு: கொதித்தெழுந்த எம்.பி.



ஓசூர், பிப்.29

ஓசூரில் ரெயில் நிலையத்தை நவீனப்படுத்தும் அரசு நிகழ்ச்சியில் செல்லக்குமார் எம்.பி. பங்கேற்றார்.

அப்போது அவர் கூறியிருப்பதாவது:

இந்த நிகழ்ச்சியில் தமி ழ்த்தாய் வாழ்த்து பாடல் போடவில்லை. நிகழ்ச்சி க்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் தொடங்கியிருக்க வேண்டும்.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை அவமதிப்பு செய்தவர் யாராக இருந்தாலும் எனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.



# கடலூர் மாநகராட்சி பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்: கடலூர் மாநகராட்சி வரி வாக்கு அளிப்போர் நல சங்கம் கோரிக்கை

கடலூர், பிப்.29

கடலூர் மாநகராட்சி வரி வாக்கு அளிப்போர் நல சங்கத்தின் சார்பில் கடலூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும் என கோரிக்கை மனுவை கடலூர் மாநகராட்சி ஆணையாளரிடம் வழங்கினர். கடலூர் மாநகராட்சி வரி வாக்காளர் சங்கத்தின் தலைவர் போஸ் ராமச்சந்திரன் தலைமையில் துணைத் தலைவர் முகுந்தன், பொருளாளர்



ஜெயக்குமார் ,செய்தி தொடர்பாளர் டாக்டர். தி. இராஜமச்சேந்திர சோழன், புருஷோத்தமன், லோகு, குணசேகரன், தண்டபாணி, பச்சையப்பன், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த மனுவில் வன்னியர் பாளையம் காமராஜர் நகர் பூங்காவை சீரமைக்க வேண்டும் புதுப்பாளையம் பகுதியில் கருமாதி கொட்டகையை உபயோகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் புருகேஷ் பேட்டையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் அடங்கிய மனு அளிக்கப்பட்டது.

# பண்ருட்டி நகராட்சி டெண்டர் முறைகேடு அதிமுக முன்னாள் எம்எல்ஏ வீட்டில் லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் அதிரடி சோதனை: பல கோடி ஆவணங்கள் சிக்கியது

பண்ருட்டி பிப் 29

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அதிமுக முன்னாள் எம்எல்ஏ சத்யா பன்னீர் செல்வம் வீடு, வீடு சென்னை உட்பட 6 இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் அதிரடியாக சோதனை செய்தனர். பண்ருட்டி நகராட்சி முன்னாள் நகர மன்ற தலைவராக இருந்தவர் பன்னீர் செல்வம். அதிமுகவை சேர்ந்த இவர் 2011 2016 ஆண்டு வரை நகர மன்ற தலைவராக பதவி வைத்தார். 2016 2021 ஆண்டு வரை இவரது மனைவி சத்யா பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்தார்.





பன்னீர்செல்வம் நகர மன்ற தலைவராக இருந்த போது ஆணையாளராக பெருமாள் என்பவர் பணியாற்றினார் அந்த கால கட்டத்தில் பண்ருட்டி பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சி சொந்தமான சைக்கிள் ஸ்டாண்ட் உரிமை வழங்குவதில் பல லட்சம் ரூபாய் முறைகேடு கூறப்படுகிறது. இது தொடர்பாக சட்டமன்ற ஆட்சி குழு அளித்த புகாரின் அடிப்படையில் நகராட்சிகள் ஆய்வு நடத்தி முறைகேடு நடந்ததை கண்டறிந்தனர் இதை பற்றி கடலூர் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் செய்யப்பட்டது லஞ்ச ஒழிப்புத்துறை கூடுதல் எஸ்பி தேவநாதன் தலைமையிலான குழுவினர் நேற்று அதிகாலை முதல் இரவு வரை பண்ருட்டி காமராஜர் உள்ள வீடு மற்றும் சென்னையில் உள்ள அவரது வீடு, நண்பர்கள் வீடு என ஆறு இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் அதிரடி சோதனை செய்தனர். இது தொடர்பாக பன்னீர்செல்வம், ஆணையாளர் பெருமாள்,

அவரது நண்பர்கள் செந்தில், மாலாபெருமாள் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. சோதனையில் பன்னீர் செல்வம் மற்றும் அவர்கள் நண்பர்கள் பெயர்களில் உள்ள முக்கிய ஆவணங்கள் சிக்கி இருப்பதாக கூறப்படுகிறது. இதற்கிடையில் சிதம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் பாண்டியன், புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் அருண்மொழி தேவன், நெய்வேலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம் பி எஸ் சிவசுப்பிரமணியம் ஆகியோர் பன்னீர்செல்வத்தை சந்திக்க வந்தனர். அதனை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் மறுத்து திருப்பி அனுப்பியதால் கட்சிக்காரர் மத்தியில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. இச்சோதனை அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

மேலும் பல கோடி ஆவணங்கள் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

# ஜக்கம்மா சொல்றா...! ஜக்கம்மா சொல்றா...! செஞ்சியில் திமுகவினர் நூதன திண்ணை பிரச்சாரம்

செஞ்சி, பிப்.29

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி பேரூராட்சிக்கு உட்பட்ட 5 வது வார்டு வ உ சி தெரு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் தமிழ்நாடு முதலமைச்சரின் இல்லம் தோறும் ஸ்டாலின் குரல் திண்ணை பிரச்சாரத்தை செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் மஸ்தான் தொடங்கி வைத்து திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி கூறி பொதுமக்களிடையே துண்டு பிரசுரங்கள் வழங்கினர். இதற்கிடையே தலைமை கழக பேச்சாளரும் சேலம் கோவிந்தன் குடுகுடுப்பு காரன்வேடமனிந்துநுூதன முறையில் ஜக்கம்மா சொல்றா! ஜக்கம்மா சொல்றா! இந்த தொகுதியில் மு. க. ஸ்டாலின் சொல்கின்ற எம்.பி. க்கு வாக்களியுங்கள் ஜக்கம்மா சொல்றா ஜக்கம்மா சொல்றா, மேலும் மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் முதலமைச்சர் செய்த சாதனை குறித்து ஜக்கம்மா சொல்றா ஜக்கம்மா சொல்ற என கூறி பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து ஒன்றிய பாஜக அரசுதமிழ்நாட்டுக்கு செய்த அநீதிகளை விலக்கிக் கூறியும்நுூதன முறையில்அவர்பிரச்சாரம் மேற்கொண்டார். இந்த பிரச்சாரத்தின் போது நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



# பண்ருட்டியில் நகர திமுக செயற்குழு கூட்டம்

பண்ருட்டி பிப் 29

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் நேற்று தட்டாஞ்சாவடி நகரக் கழக அலுவலகத்தில் நகரக் கழக அவைத் தலைவர் ராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்டக் கழக அவை தலைவர் டாக்டர் கே நந்தகோபாலகிருஷ்ணன் கலந்து கொண்டார். நகரக் கழக செயலாளரும், நகர மன்ற தலைவருமான க. இராஜேந்திரன் முன்னிலையில் வைத்தார். இதில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளில் பண்ருட்டி நகரம் முழுவதும் கழக கொடியேற்றுதல், அன்ன தானம் வழங்குதல், மாணவ மாணவிகளுக்கு



இலவச நோட்டு புத்தகங்கள் வழங்குதல், பொது மக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் நகரப் பொருளாளர் ஆர் கே ராமலிங்கம், நகரக் கழக துணைச் செயலாளர்கள் கௌரி அன்பழகன், சீனிவாசன், சசிகுமார் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கே பரணிச்சந்தர் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம் எஸ் ராம்குமார் இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத் துணை அமைப்பாளர்கள் பார்த்திபன் ராஜா பாலச்சந்தர் மதியழகன் பண்ருட்டி நகர தகவல் தொழில்நுட்ப அணி மோகன் வார்டு கழக செயலாளர்கள் விஸ்வநாதன் வட்டப் பிரதிநிதிகள், பாக முகவர்கள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



மேல்மலையனூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி மாணவ,மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, மேல்மலையனூர் ஒன்றிய கழக செயலாளர் LP நெடுஞ்செழியன் வழங்கினார். உடன் செஞ்சி பேரூராட்சி தலைவர் மொக்தியார்அலி, கழக செயலாளர்கள் நாராயண மூர்த்தி,சாந்தி சுப்பிரமணியன், ஆசிரியர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கடலூர் முதியோர் இல்லத்தில் நலத்திட்ட உதவிகள்: ஐயப்பன் எம்எல்ஏ வழங்கினார்

கடலூர் பிப் 29

கடலூர் ஒன்றியம் பாதிரிகுப்பம் ஆனந்த முதலியார் நகரில் இயங்கி வரும் பாபாஜி முதியோர் இல்லத்தில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன் நலத் திட்ட உதவிகள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பாதிரிக்குப்பம்ஊராட்சி மன்ற தலைவர் ஜல்லி சரவணன், கூட்டுறவு சங்க தலைவர் ஆதி பெருமாள், தொழிலதிபர்



சக்திவேல், ஜி.எஸ். ராஜா, சன்ரைட் , எஸ். பிரகாஷ், ஜி. சரவணன் ஆகியோர் உடன் இருந்தனர். இந்த நிகழ்ச்சியில் முதியோர் இல்ல நிறுவனத் தலைவர் டாக்டர் .சிவசங்கரி குருநாதன், பொதுச் செயலாளர் செல்வராஜ், பொருளாளர் விஜயலட்சுமி, செயலாளர் அசோக்குமார், மற்றும் பாபாஜி முதியோர் இல்ல உறுப்பினர்கள் சாரதா, நளினி, ஆரோக்யராஜ், கார்த்திக், கண்ணகி, சியாமளா, அன்னபூரணி, கோபிகா ,சசிகலா, ராஜ பிரியா, ஜேஸ்மி என்கிற சாந்தி, காயத்ரி தேவி, ஆகியோர் உடன் இருந்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி பேரூராட்சிக்கு உட்பட்ட மணியக்காரன் பட்டியில் நகர்ப்புற உள்ளாட்சி வேலைவாய்ப்பு திட்டப் பணிகளை ஊறக வளர்ச்சித் துறைறை அமைச்சர் ஐ பெரியசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டில் துவக்கி வைத்தார் அருகில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மோ பூங்கொடி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திருவேலுச்சாமி மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மற்றும் கன்னிவாடி பேரூராட்சி தலைவர் துணைத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்

# கனிமொழி குழுவிடம் குவிந்த 25 ஆயிரம் மனுக்கள்

சென்னை, பிப்.29

பாராளுமன்றத் தேர்தலையொட்டி, தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக கனிமொழி எம்.பி. தலைமையில் குழு அமைக்கப்பட்டு உள்ளது. தி.மு.க. செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தி.மு.க. விவசாய அணிச் செயலர் ஏ.கே.எஸ். விஜயன், அமைச்சர்கள் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி.ராஜா, அரசு கொறடா கோவி.செழியன், மாநிலங்களவை உறுப்பினர்கள் கே.ஆர். என்.ராஜேஸ் குமார், எம். எம்.அப்துல்லா, சட்டப் பேரவை உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், நா. எழிலன், சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் தொடர்பாக கருத்துகளைப் பெற இந்தக் குழுவினர் மண்டல வாரியாக பயணம் மேற்கொண்டனர். கடந்த 5ந் தேதி தூத்துக்குடியில் பயணத்தைத் தொடங்கிய குழுவினர், வெவ்வேறு மண்டலங்களில் பயணத்தை முடித்த நிலையில், இறுதியாக சென்னையில் கருத்



துகளைக் கோரினர்.

அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கருத்துக் கேட்பு கூட்டத்தில், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள், பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களிடம் கருத்துகள்பெறப்பட்டன.

முன்னதாக, ஆலோசனைக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து கனிமொழி எம்.பி. பேசுகையில்,

மக்களுடைய கருத்துகளை எதிரொலிக்கும் வகையில் அவர்களுக்கான அறிக்கையாக தேர்தல் அறிக்கை இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். அதன்படி, விவசாயிகள், நெசவாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரைச் சேர்ந்த மக்களைச் சந்தித்தோம். அவர்கள் என்னென்ன மாற்றங்கள் வேண்டும் என்று கருத்துக்களை முன்வைத்தார்களோ, அதையெல்லாம் ஒருங்கிணைத்து தி.மு.க. தலைவரிடம் ஒப்புதலைப் பெறுவோம். அதன்பின்னர் தேர்தல் அறிக்கையை தயாரிக்க இருக்கிறோம் என்றார்.

சென்னையில் உள்ள பல்வேறு அமைப்புகள், கட்சியைச் சேர்ந்த துணை அமைப்புகளிடம் இருந்தும் கோரிக்கைகள், கருத்துகள் இன்று (செவ்வாய்க்கிழமை) பெறப்பட்டன.

தி.மு.க.வை சேர்ந்த மூத்த தலைவர்களும், முக்கிய நிர்வாகிகளும் கனிமொழி எம்.பி. குழுவினரிடம் மனுக்களை கொடுத்தனர். தேர்தல் அறிக்கையில் அவசியம் இடம்பெற வேண்டிய அம்சங்கள் என்றும் மனுக்கள் கொடுக்கப்பட்டன.

கனிமொழி எம்.பி. தலைமையிலான குழுவினரிடம் இதுவரை சுமார் 25 ஆயிரம் மனுக்கள் குவிந்து இருக்கிறது. அதில் சுமார் 18 ஆயிரம் கருத்துக்கள் போன் மூலம் வந்தவையாகும். 2,500 கருத்துக்கள் இமெயில் மூலம் வந்திருக்கின்றன.

சமூக வலைதளங்கள் மூலம் 4 ஆயிரம் கருத்துக்கள் கனிமொழி எம்.பி.யிடம் வந்து சேர்ந்து இருக்கிறது. நேரடியாக மக்களிடம் இருந்தும் மனுக்கள் பெறப்பட்டுள்ளன. கனிமொழி எம்.பி. தலைமையிலான குழு ஆய்வை முடிக்கும் போது சுமார் 40 ஆயிரம் பரிந்துரைகள் பெறப்பட்டு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த 40 ஆயிரம் பரிந்துரைகளில் இருந்து முக்கிய அம்சங்களை தொகுத்து தி.மு.க. தேர்தல் அறிக்கையாக தயாரிக்க உள்ளனர்.

# மிகப்பெரிய ஆட்கள் பா.ஜ.க.வுக்கு வர உள்ளார்கள்

திருப்பூர், பிப்.29

திருப்பூரில் இன்று பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின் என் மண், என் மக்கள் நிறைவு விழா நடைபயணம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற அண்ணாமலை நிருபர்களிடம் கூறியதாவது:

மிகப்பெரிய ஆட்கள் பா.ஜ.க.வுக்கு வர உள்ளார்கள். பொறுத்து இருந்து பாருங்கள். அவர்கள் எம்.எல்.ஏ.க்களாகவும், முன்னாள் எம்.எல்.ஏ.க்களாகவும் இருக்கலாம். முக்கிய புள்ளிகளைகட்சிக்குள்கொண்டு வருவதில் சிக்கல்கள் உள்ளது. அதற்கு ஏற்கனவே கட்சிக்குள் இருக்கும் முக்கிய புள்ளிகளை சமாதானம் செய்ய வேண்டியது உள்ளது. அ.தி.மு.க.தான் கூட்டணி வேண்டாம் என்று கூறி கொண்டு பா.ஜ.க., பா.ஜ.க. என புலம்பி கொண்டு இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மோடிக்கு கருப்பு கொடி காட்டுவதாக அறிவித்த தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் முகிலன் கைது

ஈரோடு, பிப்.29

பிரதமர் நரேந்திர மோடி இன்று மதியம் திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே நடைபெறும் என் மண், என் மக்கள் யாத்திரை நிறைவு விழா பொதுக்கூட்டத்தில் பங்கேற்க வருகிறார். பிரதமர் நரேந்திர மோடி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு அமைப்பினர் கருப்பு கொடி காட்ட போவதாக அறிவித்து இருந்தனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்கள் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

அதன்படி ஈரோடு மாவட்டம் சென்னிமலை கிழக்கு புது வீதியில் வசிக்கும் தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாது காப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் முகிலன் பிரதமர் நரேந்திர மோடி பல்லடம் வருகை எதிர்ப்பு தெரிவித்து விவசாய அமைப்புகளுடன் சேர்ந்து கருப்பு கொடி காட்டப்போவதாக அறிவித்திருந்தார்.



தமிழகம் கடுமையான மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதற்கு, இன்று வரை ஒரு ரூபாய் கூட மத்திய அரசு இழப்பீடு வழங்காமல் இருப்பதை கண்டித்தும், ராமேஸ்வரம் மீனவர்கள் சட்ட விரோதமாக இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதன் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பதை கண்டித்தும், மேகதாதுவில் அணை கட்டுவதற்கு மறைமுகமாக துணை நிற்பதை கண்டித்தும் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்பு கொடி காட்டப் போவதாக அறிவித்திருந்தார். இந்நிலையில் சென்னிமலையில் உள்ள அவரது வீட்டுக்கு சென்ற போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முகிலனை கைது செய்தனர்.

# கூட்டணிக்கு ரெடி ஆனால் இதனை ஏற்க தயாரா?: சீமான்

சென்னை, பிப்.29

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர்சீமானிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் பின்வருமாறு:

கேள்வி:நாம் தமிழர் கட்சி தொடர்ச்சியாக தனித்தே போட்டியிட்டு வருகிறது. இதனால் வாக்கு சதவீதம் அதிகரித்து வந்த போதிலும் வெற்றி என்பது எட்டாக்கனியாகவே உள்ளதே? இது தொண்டர்கள் மத்தியில் சோர்வை ஏற்படுத்தி விடாதா?

பதில்: வாக்கு சதவீதம் அதிகரித்து வருவதே பெரிய வெற்றிதான். தலைவர், தொண்டர் என தனித்தனியே இருந்தால் தான் நீங்கள் சொல்வது போன்று சோர்வு, சலிப்பு எல்லாம் வரும். நாம் தமிழர் கட்சியில் அனைவருமே லட்சிய உறுதியுடன் புரட்சிகர அரசியலையே முன்னெடுத்துச் செல்கிறோம். 'சுதந்திர பசி கொண்ட மக்களை சோற்றுப்பசி ஒன்றும் செய்யாது' என்று எங்கள் தலைவர் சொல்கிறார்.

தற்காலிக தோல்விக்காக நிரந்தர வெற்றியை பறிகொடுக்க முடியாது. தோற்கப் போகும் கோட்பாட்டை ஏற்று அதன் வெற்றிக்காக இன்று பாடுபடுவதைவிட என்றாவது ஒருநாள் ஜெயிக்கப்போகும் கோட்பாட்டை ஏற்று அதற்காக போராடி தோற்பதே மேன்மையானது என்கிறார் நேரு. அப்படித்தான் இதனை பார்க்க வேண்டும். அதனால் இங்கு சோர்வு என்பதே கிடையாது. எளிதாக எதுவும் நடந்து விடாது. ஒரே நாளில் மாறுதல் எப்படி நடக்கும். கத்தரிக்காய், வெண்டைக்காயை நீங்கள் பறிக்க வேண்டுமென்றால் கூட விதை போட்டு 3 மாதம் காத்திருக்க வேண்டியுள்ளது. புரட்சிகர மாறுதல் அரசியலில் எந்த விலையும் கொடுக்காமல் எப்படி வரும். எந்த பின்புலமுமின்றி நாங்கள் வளர்ந்து வருவதைத்தான் நீங்கள் பார்க்க வேண்டும். வாரிசு பின்புலம், கட்சி பின்புலம் எதுவுமின்றி எளிய பிள்ளைகளாகிய நாங்கள் ஒரு அரசியலை முன்னெடுத்து செல்கிறோம். அரசியல் அதிகாரம், பல ஆயிரம் கோடிகளை கொட்டி தேர்தலை சந்திக்கும் கட்சிகளுக்கு நடுவே எதுவும் இல்லாமல் வரும் நாம் தமிழர் கட்சிக்கு வாக்கு செலுத்தும் மக்களின் கூட்டம் அதிகரித்துக் கொண்டே செல்வதும் வெற்றி தானே. சட்டமன்ற உறுப்பினராக, பாராளுமன்ற உறுப்பினராக, மாமன்ற உறுப்பினராக செல்வது மட்டுமே வெற்றி கிடையாது. எங்களது லட்சியங்கள் மக்களால் பெரிதும் வரவேற்கப்படுவதே வெற்றிதான்.

கே: பாரதிய ஜனதா, காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. என அனைத்து கட்சிகளும் கூட்டணி அரசியலையே முன்னெடுத்துச் செல்கின்றனர். அதனை எப்படி பார்க்கிறீர்கள்?

ப: கொள்கையில்லாத அரசியல் பாவம் என்கிறார் காந்தி. அப்படி கொள்கை அரசியலா? கூட்டணி அரசியலா? என்பதைபார்த்தால்கொள்கை அரசியலைத்தானே முன்னெடுக்க வேண்டும். கூட்டமாக சேர்ந்து கொள்ளையடித்தால், கொலை செய்தால் அது சரியானது என்றாகி விடுமா? அது குற்றம் இல்லையா? மக்களைமுழுமையாக நம்பாதவர்கள், நேசிக்காதவர்கள்தான், ஆள்பலம் தேடுவார்கள். தனித்த வீரன், நேர்மையானவன், நான் மக்களை நம்புகிறேன்... நேசிக்கிறேன்.

அவர்கள் என்னை ஆதரிக்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஆள் துணை எனக்கு எதற்கு? கூட்டத்தில் ஒருவனாக நிற்பதற்கு துணிவு தேவையில்லை. தனித்து நிற்பதற்குத் தான் துணிவு தேவை. அதனால் நாங்கள் அதனை கணக்கிலேயே எடுத்துக் கொள்வது இல்லை. எனவே மக்களை நம்பி தொடர்ந்து தனித்தே களத்தில்நின்று போராடுவேன்.

கே: நாம் தமிழர் கட்சிக்கு ஒதுக்கப்பட்டிருந்த கரும்பு விவசாயி சின்னம் வேறு ஒருவருக்கு ஒதுக்கப்பட்டு உள்ளதே? அதனை எப்படி அணுகப் போகிறீர்கள்? என்ன நினைக்கிறீர்கள்?

ப: வேண்டுமென்றே அது செய்யப்பட்டுள்ளது. ஒரு சின்னத்தை பெற்று சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்களில் ஒரு சதவீத வாக்கு பெற்றிருந்தாலே அந்த கட்சிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

கரும்பு விவசாயி சின்னத்தில் 6 தேர்தல்களில் போட்டியிட்டுள்ளோம். அவர்கள் சொல்வது போல வரியும் கட்டியுள்ளோம். 7 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளோம். அப்படி இருக்கும்போது இரண்டே தொகுதியில் போட்டியிட்டு 71 ஓட்டுகளையே பெற்றவருக்கு எங்கள் சின்னத்தை எப்படி ஒதுக்கினார்கள்? அவருக்கு அவசரம் அவசரமாக சின்னத்தை ஒதுக்கி கொடுத்தது ஏன்?

எனவே நாம் தமிழர் கட்சிக்கு தமிழகம்புதுச்சேரியில் விவசாயி சின்னத்தை ஒதுக்க வேண்டும் என்று வழக்குப் போட்டு உள்ளோம். அதற்கு தேர்தல் ஆணையம் என்ன பதில் சொல்லப்போகிறது? என பதை பார்க்க வேண்டும். 4 அல்லது 5 நாட்களில் அது தெரிந்து விடும்.

கே: தனித்தே போட்டியிடுவது என்கிற முடிவெடுத்துள்ள போதிலும் கூட்டணி பற்றி ரகசிய பேச்சுவார்த்தையில் எங்களோடு கட்சிகள் ஈடுபட்டுள்ளன என்று கூறியுள்ளீர்கள்? எதிர்காலத்தில் கூட்டணிக்கான வாய்ப்பு உள்ளதா? இல்லை சீமான் தனி வழியிலேயே பயணிப்பாரா? ப: நீங்கள் இப்படித்தான் (தனித்து) என்னை ஏற்க வேண்டும். என்னையென்றால் நான் கொண்டுள்ளதத்துவத்தை நீங்கள் ஏற்க வேண்டும். நான் தமிழ், தமிழர், தமிழ் தேசியத்தை முன்னெடுத்து பேசி வருகிறேன். நான் பேசுகிற அரசியலை எடப்பாடி பழனிசாமி பேசுகிறாரா? இல்லையா? அவர் வைத்திருக்கும் முழக்கம் என்ன? தமிழர் உரிமை மீட்போம். தமிழ்நாட்டை காப்போம் என்கிறார். இதைத்தானே நான் தொடர்ச்சியாக பேசி வருகிறேன்.

இப்படி எனது அரசியலை ஏற்று உங்கள் கருத்தை ஏற்கிறேன் என்று என்னோடு பயணிக்க யாராவது வந்தால் அது பற்றி அப்போது யோசிக்க வேண்டும். அதே நேரத்தில் முறைகேடாக ஆட்சி செய்து வழக்குகளை சந்தித்தவர்களுடன் சேர்ந்தால் அவர்கள் மீது இருக்கும் கோபம் எங்கள் மீதும் திரும்ப வாய்ப்பு உள்ளது.

புதிய ஆற்றல்களாக அமைப்புகள் வந்தால் அவர்களோடு கூட்டணி சேர்ந்து பயணிக்கலாம். அதற்கு நாம் தமிழர் கட்சி தயாராக உள்ளது. மற்றவர்களின் தோள் மீது ஏறி நின்று நான் உயரமானவன் என்று காட்டிக் கொள்வதை விட தனித்து நின்று உண்மையான உயரத்தை காட்டுபவர்களே மேலானவர்கள். அப்படி இருக்கும்போது மக்களுக்கு முன்பு நான் ஏன் போலியான உருவத்தை காட்ட வேண்டும்.

நான் இவ்வளவுதான் என்று தனித்து நின்று உண்மையான உருவத்தை காட்டிவிட்டு போய்விட வேண்டியதுதானே? தனித்து நின்றாலும் நாங்கள் தனித்துவத்தோடு நிற்கிறோம். அதனால் நாம் தமிழர் கட்சிதான் பெரிய கட்சி. 40 தொகுதியிலும் நான்தான் தனித்து போட்டியிடுகிறேன்.

எனக்கு முன்பு விஜயகாந்த் மட்டுமே அப்படி களம் கண்டுள்ளார். 2014ம் ஆண்டு ஜெயலலிதா அதுபோன்று தனித்து போட்டியிட்டு தேர்தலை சந்தித்து 37 இடங்களிலும் வெற்றி பெற்றார். பாராளுமன்ற தேர்தலில் 40 தொகுதியிலும் சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதியிலும் தனித்து போட்டியிட போகிறோம். எனவே நாங்கள்தான்பெரியகட்சி. தனித்து நிற்பதற்கு இப்போது யாருக்கும் தைரியம் இல்லை என்பதே உண்மையாகும். இவ்வாறு சீமான் கூறினார்.

# அ.தி.மு.க.வில் இணையும் 2 பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் அம்மன் அர்ஜீனன் தகவல்

கோவை, பிப்.29

கோவை மாநகர், மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், எம்.எல்.ஏ.வுமான அம்மன் அர்ச்சுனன் கோவையில் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:



நான் அ.தி.மு.க.வில் ராஜாவாக உள்ளேன். பா.ஜ.க.வுக்கு சென்று கூஜா தூக்க விரும்பவில்லை. நேற்று கோவை அவினாசி சாலையில் உள்ள ஒரு ஓட்டலில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பா.ஜ.க.வில் இணைய உள்ளதாக தகவல் பரவியது.

அந்த சமயத்தில் நான் ஓட்டல் அருகே உள்ள எனது நண்பர் வீட்டிற்கு சென்றிருந்தேன். உடனே நான் பா.ஜ.க.வில் இணைய உள்ளதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவியது. அவினாசி சாலை என்பது பா.ஜ.க.வினருக்கு மட்டும் சொந்தமானது அல்ல. ஒரு பொது வழிச்சாலை. மடியில் கனம் இருந்தால் தான் வழியில் பயம்.

அ.தி.மு.க.வில் உள்ள எந்தவொரு அடிப்படை தொண்டனும் பா.ஜ.க.வில் இணைய மாட்டான். நாங்களும் சொல்வோம். இன்று பிற்பகல் 2.30 மணிக்கு 2 பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அ.தி.மு.க.வில் இணைவார்கள்.

அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்ததால் தான் பா.ஜ.க.வால் சட்டமன்றத்தேர்தலில்கோவையில் வெற்றி பெற முடிந்தது. நாங்கள் உயிரை கொடுத்து உழைத்து வெற்றி பெற வைத்தோம்.

மகாராஷ்டிராவில் ஏக்நாத் ஷிண்டேவை பா.ஜ.க.வில் இணைத்தது போல் இங்கும் நினைக்கிறார்கள். ஆனால் அது ஒரு போதும் நடக்காது. இது வடநாடு கிடையாது. இங்கிருந்து ஒரு தொண்டனை கூட பா.ஜ.க.வில் இணைக்க முடியாது. வருகிற பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. கோவையில் வெற்றி பெற்றால் நான் அரசியல் வாழ்வை விட்டு விலகி கொள்கிறேன். எங்களால் தான் பா.ஜ.க.வினர் வெற்றி பெற்றார்கள் என்பதை மறுக்க இயலாது. கள நிலவரம் எங்களுக்கு தான் தெரியும். தமிழகத்தில் கோவை அ.தி.மு.க.வின் கோட்டை. பா.ஜ.க.வால் தனித்து வெல்ல முடியாது. இவ்வாறு அவர்கூறினார்.

# திமுக அரசைக் கண்டித்து மார்ச் 4ம் தேதி ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, பிப்.29

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

போதைப் பொருட்களைத் தடுப்பதற்காக இயங்குகின்ற டெல்லியினுடைய சிறப்பு போலீஸ் அமைப்பும் இணைந்து நடத்திய சோதனையில், டெல்லியில் 3 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதோடு, இந்த கும்பலுடைய தலைவனாக செயல்பட்டவர் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி துணை அமைப்பாளர் அ.ஜாபர் சாதிக் தான் என்ற செய்தியும், அவரை காவல் துறை தேடுகிறது என்ற செய்தியும் வந்தபோதுதான், உண்மையிலேயே தமிழக மக்கள் அனைவரும் அச்சத்தில் உறைந்துபோயுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல் கும்பலின் தலைவன் ஜாபர் சாதிக் அமைச்சர்களுடன் எடுத்துள்ள புகைப்படங்கள் ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் வெளிவந்துள்ளன. இந்த அரசியல் பின்புலத்தை வைத்துக் கொண்டு ஜாபர் சாதிக் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டிருப்பது தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டு உள்ள மிகப் பெரிய தலைகுனிவாகும்.

இன்று, தமிழ் நாட்டைத் தாண்டி, இந்தியாவைத் தாண்டி, உலகம் முழுவதும் போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்களின் தலைவனாக செயல்பட்டு உள்ள தி.மு.க.வைச் சேர்ந்த ஜாபர் சாதிக்கால் தமிழ் நாட்டிற்கே மிகப் பெரிய தலைகுனிவு ஏற்பட்டுள்ளது.

மேலும், தமிழக காவல் துறைத் தலைவர் சங்கர் ஜிவால் ஒரு நிகழ்ச்சியில், மேற்படி ஜாபர் சாதிக்குக்கு பரிசளித்துப் பாராட்டுகின்ற புகைப்படங்கள் வெளியாகி இருக்கிறது.

இதன்மூலம் போதைப் பொருள் கடத்தல் கும்பலோடு அரசு எந்திரத்திற்கே தொடர்பு இருக்கிறது என்பதும் வெளிப்படையாகவே தெரிகிறது. எனவே, 'வேலியேபயிரை மேய்கிறதா?' என்ற சந்தேகம் தமிழ் நாட்டு மக்களுக்கு வந்திருக்கிறது. அதை எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் வெளிப்படுத்த வேண்டிய தலையாய கடமை எனக்கு இருக்கிறது.



எனவே, தி.மு.க. அரசு பதவியேற்ற நாளில் இருந்து சட்டம்ஒழுங்கு முற்றிலுமாக சீர்கேடு அடைந்துள்ளதற்கும்; தமிழகம் போதைப் பொருட்களின் கேந்திரமாக மாறி, வருங்கால தலைமுறையினரின் வாழ்க்கை சீரழிந்து வருவதற்கும்; போதைப் பொருள் கடத்தலால் இந்திய அளவில் தமிழ் நாட்டிற்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளதற்கும் காரணமான தி.மு.க. அரசைக் கண்டித்து, அ.தி.மு.க. இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை, மகளிர் அணி, மாணவர் அணி ஆகிய அமைப்புகளின் சார்பில், வருகிற 4ந்தேதி (திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் வருவாய் மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டங்களுக்கான ஏற்பாடுகளை, வருவாய் மாவட்டங்களில் கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களைச் சேர்ந்த, மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மார்ச் 1ந்தேதி முதல் தேர்தல் பணியை தீவிரப்படுத்த பிரேமலதா திட்டம்

சென்னை, பிப்.29

பாராளுமன்ற தேர்தலில் தே.மு.தி.க. போட்டியிடும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அறிவித்தார்.

எந்த கட்சியுடன் கூட்டணி சேர்ந்து தேர்தலை சந்திப்பது என்பது பற்றி மாவட்ட செயலாளர்கள் கருத்துக்களை கூறினார்கள். சிலர் அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்து தேர்தலை சந்திக்கலாம் என்றும் ஒரு சிலர் பா.ஜ.க. உடன் இணைந்து தேர்தலில் போட்டியிடலாம் எனவும் தெரிவித்திருந்தனர்.

ஆனாலும் அது பற்றி எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. தே.மு.தி.க.வை அ.தி.மு.க.வும் பாரதீய ஜனதாவும் தங்கள் பக்கம் இழுக்க மறைமுகமான வேலைகளில் ஈடுபட்டனர். தங்கள் கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள் மூலம் ரகசியமாக தே.மு.தி.க. தலைமை பொறுப்பாளரிடம் பேசி வருகின்றனர்.

4 அல்லது 5 தொகுதிகள் வரை கூட்டணியில் ஒதுக்குவதாக பேசி வருகின்றனர். ஆனாலும் இது பற்றி தே.மு.தி.க. தரப்பில் இருந்து எந்த தகவலும் வெளியிடப்படவில்லை. அ.தி.மு.க. அணியில் சேர்வதா? பா.ஜனதா அணியில் சேர்வதா? என்று முடிவெடுக்காமல் மதில் மேல் பூனையாக தே.மு.தி.க. இருந்து வருகிறது.

இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் கூட்டணி, தொகுதி பங்கீடு குறித்து பேசி வரும் நிலையில் தே.மு.தி.க. மவுனமாக இருப்பது ஏன் என்ற கேள்வி எழுந்தது. தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ள நிலையில் தே.மு.தி.க. எந்தவித சலசலப்பும் இல்லாமல் தேர்தல் பணிகளில் ஈடுபடாமல் இருப்பது ஏன் என்று அதன் முக்கிய நிர்வாகி ஒருவரிடம் கேட்டபோது அவரது விளக்கம் ஏற்புடையதாக இருந்தது. அவர் கூறியதாவது:

இந்த கட்சி ஒரு குடும்பத்தைப் போல கட்டி பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் கேப்டன் விஜயகாந்த் மறைவையொட்டி துக்கம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. 60 நாட்கள் கட்சியில் துக்க நாட்களாக பின்பற்றப்பட்டு வருவதால் தேர்தல் பணியில் இதுவரை ஈடுபடவில்லை.

டிசம்பர் மாதம் 28ந்தேதி விஜயகாந்த் மரணம் அடைந்தார். அதைத் தொடர்ந்து 60 நாட்கள் கட்சியிலும் சரி குடும்பத்திலும் சரி எவ்வித முக்கிய காரியங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அந்த வகையில் துக்க நாட்கள் நாளையுடன் முடிகிறது.

அதன் பின்னர்தான் தேர்தல் கூட்டணி, தொகுதிகள் பங்கீடு குறித்து பேசுவோம். வருகின்ற பாராளுமன்றத் தேர்தல் கட்சியின் முக்கியமான தேர்தலாக பார்க்கப்படுகிறது. விஜயகாந்த் மறைவுக்குப் பிறகு சந்திக்கப்படும் முதல் தேர்தல் என்பதால் யாருடன் கூட்டணி வைப்பது என்பதை முடிவு செய்வதோடு எத்தனை இடங்களில் போட்டி இடுவது என்பது பற்றியும் இறுதி செய்து எங்களது நிலைப்பாட்டிற்கு ஒத்த கட்சியுடன் கூட்டணி அமைப்போம். வெற்றி பெறுவோம். பாராளுமன்றத்தில் தே.மு.தி.க.வின் குரல் ஒலிக்கும். அது நிச்சயம் நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

விஜயகாந்த் மறைவு துக்க நாட்கள் அனுசரிப்பு நாளையுடன் முடிவதால் மார்ச் 1ந்தேதி முதல் தேர்தல்பணிகளைதீவிரபடுத்த கட்சி தலைமை திட்டமிட்டு உள்ளது.

பிரேமலதா தலைமையில் பேச்சுவார்த்தைக் குழு விரைவில் நியமிக்கப்படுகிறது. குழுவினரிடம் அ.தி.மு.க. பா.ஜ.க. முக்கிய நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். மேலும் தேர்தலில் போட்டியிட விரும்புவோர்களிடம் விருப்ப மனுக்கள் பெறவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான தேதியும் அறிவிக்கப்பட உள்ளன. மார்ச் முதல் வாரத்தில் இருந்து தேர்தல் பணியை தீவிரப்படுத்தும் தே.மு.தி.க. அடுத்து வரும் சில நாட்களில் கூட்டணியை இறுதி செய்கிறது.

# கொரோனா காலத்தில் உயர்த்தப்பட்ட பயணிகள் ரெயில் கட்டணம் குறைப்பு


சென்னை, பிப்.29

நகரப் பகுதிகளோடு கிராமப்புற மக்களை இணைக்கும் வகையில் பல ஆண்டுகளாக பயணிகள் ரெயில் இயக்கப்பட்டு வந்தது. பாசஞ்சர் ரெயில் என்று கூறப்படும் இந்த ரெயில்கள் எல்லா ரெயில் நிலையங்களிலும் நின்று செல்லும்.

முக்கிய நகரங்களில் இருந்து 200 கி.மீ. தூரத்திற்குள் மட்டும் சென்று வரும் ரெயில்களில் கட்டணம் குறைவாக இருந்ததால் மக்கள் அதிகளவில் பயன்படுத்தினர். விவசாய விளைபொருட்கள் எடுத்துச் செல்லவும் இது உதவுவதால் கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள் தாங்கள் பயிர் செய்த உணவு பொருட்களை நகரப்பகுதிகளுக்கு கொண்டு வருவது வழக்கம்.

எல்லா ரெயில் நிலையங்களிலும் நின்று செல்வதால் பயணிகள் ரெயில்களுக்கு கிராம மக்கள் இடையே அதிக வரவேற்பு இருந்தது. இதற்கிடையே, கொரோனா காலத்தில் பயணிகள் ரெயில், மெயில் எக்ஸ்பிரஸ் ரெயிலாக மாற்றப்பட்டது. இதனால் கட்டணம் உயர்த்தப்பட்டு வசூலிக்கப்பட்டது. இது அப்போது எதிர்ப்பை ஏற்படுத்தினாலும் கொரோனா காலத்தில் பெரிதாக பேசப்படவில்லை. கடந்த 3 ஆண்டாக மெயில் எக்ஸ்பிரஸ் என்ற பெயரில் கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்பட்டது.

இந்நிலையில், மீண்டும் இந்த ரெயில்கள் பயணிகள் ரெயில்களாக மாற்றம் செய்து ரெயில்வே வாரியம் அறிவித்துள்ளது.




கடந்த 21ம் தேதியில் இருந்து இது மீண்டும் நடைமுறைக்கு வந்தது.

நாடு முழுவதும் உள்ள மெயில் எக்ஸ்பிரஸ், பயணிகள் ரெயில்களாக மாற்றப்பட்டதால் கட்டணமும் குறைந்தது. தமிழகத்தில் சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட டிவிஷன்களில் இயக்கப்படும் இத்தகைய ரெயில்களில் இனி சாதாரண கட்டணம் வசூலிக்கப்படும். இதன் மூலம் அதிகபட்சமாக ரூ.30 வரை கட்டணம் குறைய வாய்ப்புள்ளது.

இதுவரையில் மெயில் எக்ஸ்பிரஸ் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. புதிய அறிவிப்புக்கு பிறகு பயணிகள் ரெயில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கொரோனா காலத்தில் உயர்த்தப்பட்ட கட்டணம் தற்போது குறைக்கப்பட்டு உள்ளது.

# நீலகிரியில் பாஜக நிற்பது உறுதி

நீலகிரி, பிப்.29

பாராளுமன்ற தேர்தலுக்கு தமிழக அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

குறிப்பாக கூட்டணி அமைப்பதில் பல்வேறு கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. இந்நிலையில், மத்திய இணை மந்திரி எல்.முருகன் கூறியிருப்பதாவது:

பாண்டிச்சேரி உட்பட அனைத்து தொகுதிகளிலும் பாஜக கூட்டணி வெற்றி பெறும்.

நாடு முழுவதும் பாஜக 400 தொகுதிகளிலும் வெற்றி பெறும்.

நீலகிரி பாராளுமன்ற தொகுதியில் பாஜக வேட்பாளர் நிற்பது உறுதியாகியுள்ளது.

வேட்பாளர் யார் என்று கட்சி தலைமை, பாராளுமன்ற குழு அறிவிக்க உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நமது தின கனி
Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
29.2.2024




# 'தக் லைப்' பற்றி ஜெயம் ரவி சொன்ன தகவல்

பிரபல திரைப்பட இயக்குனரும் தயாரிப்பாளருமான மணிரத்னம் 36 ஆண்டு இடைவெளிக்குப்பின், நடிகர் கமல்ஹாசனுடன் இணைந்து 'தக் லைப்' என்ற புதிய ஆக்ஷன் படத்தை இயக்கி வருகிறார். திரிஷா, ஜெயம் ரவி, துல்கர் சல்மான், ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லெக்ஷ்மி, கௌதம் கார்த்திக் ஆகியோர் நடிக்கின்றனர். இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் படத்துக்கு இசையமைக்கிறார். கமல்ஹாசன் மணிரத்னம் இணைந்த இந்த படத்தின் ஆரம்பகட்ட படப்பிடிப்புகள் சென்னையில் 5 நாட்கள் நடந்தது. இந்நிலையில் நடிகர் ஜெயம் ரவி, ஒரு பேட்டியின் போது இந்த படம் குறித்த தகவலை பகிர்ந்துள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது: மணிரத்னம் சார் எனக்கு இந்த படத்தில் நடிக்க வாய்ப்பு தர அழைக்கும் போது அது எந்த படமாக இருந்தாலும் 'நோ' சொல்ல முடியாது. அதனால் இந்த படத்தில் நடிக்கிறேன். 'தக் லைப்' படத்தில் நான் கேமியோ ரோலில் நடிக்கிறேன். எனது காட்சி தொடர்பான படப்பிடிப்பு மார்ச் மாதம் தொடங்குகிறது. இவ்வாறு அவர் கூறினார். ஐரோப்பிய செர்பியா நாட்டில் விரைவில் நடைபெற உள்ள இதன் படப்பிடிப்பில் நடிகர் ஜெயம் ரவி கலந்து கொண்டு நடிக்கிறார். இந்த படத்தில் நடிகர் கமல்ஹாசன் தற்காப்பு கலைத்திறன்களை வெளிப்படுத்துகிறார். பழங்கால வரலாற்று ஆயுதங்களுடன் எதிரிகளுடன் மோதும் பயங்கர சண்டை காட்சிகள் அதிர்வை வெளிப்படுத்தும் வகையில் அமைய இருக்கின்றன.

# சந்தானத்தின் புதிய பட டைட்டில், பர்ஸ்ட்லுக்கை வெளியிடும் கமல்ஹாசன்





ஜி.என்.அன்புசெழியனின் கோபுரம் பிலிம்ஸ் நிறுவனம், 'வெள்ளைக்கார துரை', 'தங்கமகன்' 'மருது', 'ஆண்டவன் கட்டளை'உள்ளிட்ட வெற்றிபடங்கள் தயாரித்ததை தொடர்ந்து 5வதாக சந்தானம் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் ஒன்றை பிரம்மாண்ட பொருட்செலவில் தயாரிக்கிறது.

நடிகர் சந்தானம் தமிழில் கடைசியாக 'கிக்'படத்தில் நடித்தார். தற்போது அன்புசெழியனின் தயாரிப்பில் புதிய படத்தில் நடிக்கிறார். இந்த படத்தை இயக்குனர் என்.ஆனந்த் இயக்கி வருகிறார். படத்தில் பிரியாலயா கதாநாயகியாக அறிமுகமாகிறார். தம்பி ராமையா, விவேக் பிரசன்னா, முனிஷ் காந்த், பால சரவணன் ஆகியோரும் நடித்து உள்ளனர். இப்படத்திற்கு டி.இமான் இசையமைத்துள்ளார்.

பல வெற்றி படங்களுக்கு கதை, வசனம் எழுதிய எழிச்சூர் அரவிந்தன் இப்படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி உள்ளார். படத்துக்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை. அனைத்து இளைஞர்களும் ரசித்து கொண்டாடும் விதமாக சந்தானத்தின் கதாபாத்திரம் உருவாகி உள்ளது.

சென்னை மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் இப்படத்தின் படப்பிடிப்புகள் நடத்தப்பட்டது. தற்போது முழுவீச்சில் இறுதிகட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இப்படத்தின் 'டைட்டில்' மற்றும் 'பர்ஸ்ட் லுக்' நாளை காலை 10.30 மணிக்கு வெளியிடப்படுகிறது. இதனை நடிகர் கமல்ஹாசன் வெளியிடுகிறார்.



# 'வேட்டையன்' படப்பிடிப்பு மீண்டும் ஐதராபாத் சென்ற ரஜினி

ரஜினி நடிக்கும் 'வேட்டையன்' படத்தை டைரக்டர் ஞானவேல் இயக்கி வருகிறார். இதில் அமிதாப் பச்சன், பஹத் பாசில், ராணா டகுபதி, மஞ்சு வாரியர், ரித்திகா சிங், துஷரா விஜயன் உள்ளிட்ட பல முக்கிய நடிகர்கள் நடிக்கின்றனர். லைகா புரொடக்சன்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

கடந்த சில மாதங்களாக 'வேட்டையன்'படத்தின் படப்பிடிப்புகள் தென் தமிழக பகுதிகளான நெல்லை, குமரியில் நடந்தது. அதை தொடர்ந்து ஆந்திர மாநிலம் கடப்பாவில் இதன் படப்பிடிப்புகள் நடந்தது. கடந்த 6 ந்தேதி படப்பிடிப்பிற்காக ரஜினி ஐதராபாத் சென்றார்.

இந்நிலையில் ஐதராபாத்தில் உள்ள ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் 'வேட்டையன்' படத்தின் படப்பிடிப்புகள் நடந்து வருகிறது. தற்போது படப்பிடிப்பில் கலந்து கொள்ள நடிகர் ரஜினி இன்று காலை ஐதராபாத்துக்கு செல்ல சென்னை விமான நிலையத்திற்கு வந்தார். அவரது ஸ்டைலான நடை அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. மிகுந்த உற்சாக புன்சிரிப்புடன் ரஜினி ஐதராபாத்திற்கு விமானத்தில் புறப்பட்டு சென்றார்.

'வேட்டையன்' படத்தின் படப்பிடிப்புகள் மார்ச் மாதம் முடிவடையும் என தெரிகிறது.

# மகளிர் தினத்தில் வெளியாகும் "ஜெ பேபி"



பா.இரஞ்சித் தயாரிப்பில் நடிகை ஊர்வசி, தினேஷ், மாறன் நடிப்பில் "ஜெ பேபி" திரைப்படம் மார்ச் 8ந் தேதி மகளிர் தினத்தன்று வெளியாக இருக்கிறது. பா.இரஞ்சித்தின் நீலம் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் இதுவரை வெளிவந்த படங்கள் சமூக கருத்துக்களை உள்ளடக்கிய படங்களாகவே வெளிவந்திருக்கிறது. "ஜெ பேபி" படம் குடும்ப உறவுகளைப்பற்றி பேசுகிற படமாகவும், நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்தும் எடுக்கப்பட்டிருக்கிறது. "ஜெ பேபி" திரைப்படத்தின் சிறப்புக்காட்சி சமீபத்தில் திரைத்துறையினருக்கு திரையிடப்பட்டது. படத்தை பார்த்த அனைவரும் படக்குழுவினரையும் படத்தின் இயக்குனர் சுரேஷ் மாரி, படத்தின் தயாரிப்பாளர் பா.இரஞ்சித் இருவரையும் வெகுவாக பாராட்டியுள்ளனர். குடும்பத்தோடு பார்க்க வேண்டிய படம், சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும். படம் பார்க்க தியேட்டர் வருபவர்கள் அவசியம் தங்களது அம்மாக்களையும் அழைத்து வாருங்கள். இது எல்லோருக்குமான படம் என்கிறார் இயக்குனர் சுரேஷ் மாரி. 'ஜெ பேபி' படத்தை சக்தி பிலிம் பேக்டரி வெளியிடுகிறது.

# பிரியாமணி படத்துக்கு தடை... ஏன் தெரியுமா?



ஆதித்யா ஜம்பாலே இயக்கத்தில் பிரியாமணி, யாமி கவுதம் நடித்துள்ள ஆர்ட்டிக்கிள் 370 படம் திரைக்கு வந்து ஓடிக்கொண்டு இருக்கிறது. இந்த படம் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வரவேற்பை பெற்று நல்ல வசூல் பார்த்து வருகிறது.

ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டு இருந்த சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு ரத்து செய்ததை மையமாக வைத்து இந்த படம் தயாராகி இருந்தது. ஆர்ட்டிக்கிள் 370 படத்தின் மூலம் மக்கள் உண்மையான தகவல்களை தெரிந்து கொள்ள முடியும் என்று பிரதமர் நரேந்திர மோடியும் பாராட்டி இருந்தார்.

ஆர்டிக்கிள் 370 படத்தை குவைத், சவுதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் திரையிட படக்குழுவினர் அனுப்பி வைத்தனர். அங்குள்ள தணிக்கை குழுவினர் படத்தை பார்த்து ஆட்சேபகரமான காட்சிகள் இருப்பதாக கூறி படத்துக்கு தடை விதித்தனர். வளைகுடா நாடுகள் தடை காரணமாக அங்கு வசிக்கும் இந்திய மக்கள் ஆர்ட்டிக்கிள் 370 படத்தை பார்க்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. பிரதமர் பாராட்டிய படத்துக்கு வளைகுடா நாடுகள் தடை விதித்து இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆர்ட்டிக்கிள் 370 இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வரவேற்பை பெற்று நல்ல வசூல் பார்த்து வருகிறது.

# ஆட்டோவில் சென்ற ஏ.ஆர்.ரகுமான்... வைரலாகும் புகைப்படம்



சென்னை அண்ணா சாலையில் புகழ்பெற்ற ஹஸ்ரத் சையத் மூசா காதரி தர்கா உள்ளது. இங்கு அனைத்து சமூக மக்களும் மத வேறுபாடு இன்றி வழிபடுவது வழக்கம்.

இந்த தர்காவில் சந்தனக்கூடு விழா நடந்தது. இதில் பங்கேற்க இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் தனது காரில் வந்து இருந்தார். தர்காவில் நடந்த சிறப்பு பிரார்த்தனையில் அவர் கலந்து கொண்டார்.

அப்போது ஏ.ஆர்.ரகுமானை காண ஏராளமான ரசிகர்கள் அங்கு குவிந்தனர். ரோட்டிலும் திரண்டு நின்றனர். ஏ.ஆர்.ரகுமானுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளவும் முண்டியடித்தனர்.

இதனால் அந்த பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. ஏ.ஆர். ரகுமான் வந்த காரை வெளியே எடுக்க முடியவில்லை. இதையடுத்து ஏ.ஆர். ரகுமான் அந்த வழியாக வந்த ஆட்டோவை நிறுத்தி அதில் ஏறி வீட்டுக்கு சென்றார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

# ரோகித்தான் அடுத்த டோனி சுரேஷ் ரெய்னா




இங்கிலாந்து அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை ரோகித் தலைமையிலான இந்திய அணி 31 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. முன்னணி வீரர்கள் இல்லாமல் இளம் வீரர்களை வைத்து பலம் வாய்ந்த இங்கிலாந்தை வீழ்த்தியது ரசிகர்களை மத்தியில் பெரும் வரவேற்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் டோனி போலவே இளம் வீரர்கள் பலருக்கும் வாய்ப்புகளை அளிக்கிறார் என இந்திய அணியின் முன்னாள் வீரர் சுரேஷ் ரெய்னா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

டோனியை போலவே இளம் வீரர்கள் பலருக்கும் ரோகித் சர்மா வாய்ப்புகளை அளிக்கிறார். டோனி தலைமையில் நிறைய போட்டிகளில் விளையாடி இருக்கிறேன். கங்குலி தனது அணிக்கு எப்போதும் ஆதரவாக இருப்பார். டோனி தன்னை முன் நிறுத்தி அணியை வழி நடத்தினார். ரோகித் நன்றாக கேப்டன்சி செய்கிறார். அவர் சரியான பாதையில் சென்றுக்கொண்டு இருக்கிறார்.


இவ்வாறு ரெய்னா கூறினார்.

# மும்பை ரஞ்சி அணியில் ஷ்ரேயாஸ் அய்யர்



இந்திய அணியின் மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன் ஷ்ரேயாஸ் அய்யர். இவருக்கு பிசிசிஐக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக தகவல் வெளியானது. கிரிக்கெட்டில் சிறுசிறு காயம் ஏற்பட்டு அணியில் இருந்து விலகி மீண்டும் அணிக்கு திரும்ப தயாராகும்போது ரஞ்சி டிராபியில் விளையாடி திறமையை நிரூபிக்க வேண்டும் என பிசிசிஐ வலியுறுத்துவது உண்டு. அதேபோல் சர்வதேச போட்டிகளில் தொடர்ந்து அதிக ரன்கள் அடிக்க முடியாமல் ஃபார்ம் இன்றி தவிக்கும்போதும் உள்ளூர் போட்டிகளில் விளையாட வலியுறுத்துவது உண்டு. ஆனால் பிரபல நட்சத்திர வீரர்கள் பெரும்பாலும் ரஞ்சி போட்டிகளில் விளையாடுவதில்லை. நேரடியாக இந்திய அணிக்கு தகுதி பெறுவார்கள். அந்த வகையில் ஷ்ரேயாஸ் அய்யர் ரஞ்சி டிராபியில் விளையாட ஆர்வம் காட்டவில்லை. இதனால் பிசிசிஐயின் மத்திய ஒப்பந்தத்தில் இருந்து நீக்கப்பட வாய்ப்பு இருப்பதாகவும் தகவல் வெளியானது. இதற்கிடையே காயம் காரணமாகத்தான் ரஞ்சி டிராபியில் விளையாடவில்லை என ஷ்ரேயாஸ் தெரிவித்ததாகவும், அதேவேளையில் அவருக்கு காயம் இல்லை பயிற்சியாளர் தெரிவிததாகவும் தகவல் வெளியானது. இந்த நிலையில் ரஞ்சி கோப்பைக்கான மும்பை அணியில் ஷ்ரேயாஸ் அய்யர் சேர்க்கப்பட்டுள்ளார். மார்ச் 2ந்தேதி தொடங்கும் அரையிறுதி போட்டியில் மும்பை தமிழ் நாடு அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. ரஞ்சி டிராபி காலிறுதியில் தமிழ்நாடு அணி சவுராஷ்டிராவை இன்னிங்ஸ் மற்றும் 33 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. மும்பை பரோடா இடையிலான போட்டி டிராவில் முடிவடைந்தது. முதல் இன்னிங்ஸ் முன்னிலை அடிப்படையில் மும்பை அணி அரையிறுதிக்கு முன்னேறியது. மற்றொரு அரையிறுதி போட்டியில் விதர்பா மத்திய பிரதேசம் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. காலிறுதியில் மத்திய பிரதேசம் ஆந்திராவை வீழ்த்தியிருந்தது. கர்நாடகாவை விதர்பா வீழ்த்தியிருந்தது.

# ஐபிஎல் தொடரிலும் கோலி விளையாடாமல் போகலாம் சுனில் கவாஸ்கர்



இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுபயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் 31 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை வகிக்கிறது.

முன்னணி வீரர்கள் இன்றி இளம் வீரர்களுடன் இந்திய அணி தொடரை கைப்பற்றி உள்ளது.

இந்த தொடரில் இந்திய அணியில் இடம் பிடித்திருந்த விராட் கோலி தனிப்பட்ட காரணங்களுக்காக விலகினார். அவர் எதற்காக விலகினார் என்பது கேள்வி கூறியாக இருந்தது. இது குறித்து பல வதந்திகள் பரவிய நிலையில் அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது தெரிய வந்தது.




இதனை தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டு வதந்திக்கு விராட் கோலி முற்றுப்புள்ளி வைத்தார்.

இந்நிலையில் ஐபிஎல் தொடரிலும் இருந்தும் விராட் கோலி விலகலாம் என இந்திய அணியின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

இங்கிலாந்து அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து விலகியது போல, ஐபிஎல் 2024 தொடரிலும் விராட் கோலி விலகலாம்.

ரோகித் சர்மா குறித்து அவர் பேசியது,

மும்பை இந்தியன்ஸ் அணி ஹார்திக் பாண்ட்யாவை கேப்டனாக நியமித்தது சரி. இதனால் ரோகித் எந்தவித பதற்றம் இன்றி விளையாடலாம். துருவ் குறித்து பேசியது, இங்கிலாந்து எதிரான தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் ஐபிஎல் தொடரில் அவர் சூப்பர் ஸ்டாராக இருக்கலாம். இவ்வாறு கவாஸ்கர் கூறினார்.



# டி20யில் அதிவேக சதம்: சாதனை படைத்த நமீபியா வீரர் வீடியோ

நேபாள் நாட்டில் முத்தரப்பு தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேபாள், நமீபியா, நெதர்லாந்து ஆகிய அணிகள் மோதுகிறது. இதன் முதல் போட்டி நடைபெற்றது. இதில் நமீபியா நேபாள் மோதின. இதில் டாஸ் வென்ற நமீபியா பேட்டிங்கை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் ஆடிய நமீபியா 20 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 206 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக லோஃப்டி ஈடன் 101 ரன்கள் குவித்தார். இதனையடுத்து களமிறங்கிய நேபாள் அணி 18.5 ஓவர்களில் 186 ரன்னில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 20 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக லோஃப்டி ஈடன் தேர்வு செய்யப்பட்டார்.

இந்த போட்டியில் அதிவேக சதம் அடித்து லோஃப்டி ஈடன் வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

அவர் 33 பந்துகளில் சதம் அடித்து அசத்தியுள்ளார். இதில் 11 பவுண்டரி, 8 சிக்சர்கள் அடங்கும்.

இதற்கு முன்னதாக 34 பந்துகளில் சதம் அடித்து கௌசல் மல்லா அதிவேகமாக சதம் அடித்தவர்களின் பட்டியலில் முதலிடத்தில் இருந்தார். இவரைத் தொடர்ந்து தென் ஆப்பிரிக்கா வீரர் டேவிட் மில்லர் (35 பந்துகள்) 2வது இடத்திலும், ரோகித் சர்மா (35 பந்துகள்) 3வது இடத்திலும் இடம் பெற்றிருந்தனர்.

இவர்கள் அனைவரையும் பின்னுக்கு தள்ளி, அதிவேகமாக சதம் அடித்தவர்களின் பட்டியலில் நம்பர் 1 இடத்தை ஈடன் பிடித்துள்ளார்.



பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்

விளக்கம்:
விருந்தினரை ஓம்பி அந்த வேள்வியில் ஈடுபடாதவர் பொருள்களை வருந்திக்காத்துப் (பின்பு இழந்து) பற்றுக்கொடு இழந்தோமே என்று இரங்குவர்

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
86670 25357
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.